செ.வெ.எண்:21 நாள்:09.09.2021

# செய்திக்குறிப்பு

## கரூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் போட்டித்தேர்வுகளுக்கு இலவச நேரடி பயிற்சி வகுப்புகள் தொடக்கம்

கரூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் இயங்கி வரும் தன்னார்வ பயிலும் வட்டம் சார்பாக தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் 01.09.2021 முதல் நேரடியாக மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், வெண்ணைமலை, கரூரில் நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விருப்பமுள்ள இளைஞர்கள் கரூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை நேரடியாக தொடர்பு கொண்டு, பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.த.பிரபுசங்கர்.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

தொடர்புக்கு :- 04324-223555

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கரூர்.